Mr.T.Gnanasekaram BSc(Hons)
Batticaloa Zone - 19.04.2020

10. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.

a. இலைவாய் திறந்து மூடும் பொறிமுறை
b. மனித நுரையீரலின் உட்சுவாச காற்றோட்ட பொறிமுறை
c. DNA மூலக்கூறின் கட்டமைப்பு

Reference

உயிரியல் பாடத்திட்டம் *2017* புதியது

பக்க எண்கள்	**கற்றற் பேறுகள்**
6	DNA கட்டமைப்பு, தொழில்களை கலந்துரையாடுவர்
34	K^+ உட்பாய்வைப் பயன்படுத்தி இலைவாய் திறந்து மூடல் பொறிமுறையை விபரிப்பர்
60	மனித சுவாசப்பையின் காற்றுட்டற் பொறிமுறையை விபரிப்பர்

www.lkedu.lk

Mr.T.Gnanasekaram BSc(Hons)
Batticaloa Zone - 19.04.2020

KEY – Short Notes

10(a)

1. காவற்கலங்களில் ஏற்படும் வீக்கத்தின் மாற்றத்தினால்
2. இலைவாய் திறந்து மூடும்
3. பிரசாரணம் மூலம் காவற்கலங்களினுள் நீர் செல்லும் போது
4. காவற்கலங்களில் விக்கம் அதிகரிக்கிறது
5. காவற்கலங்களில் சமனற்ற விரிவு ஏற்படும்
6. உட்சுவர் வளைவை ஏற்படுத்தி ஒன்றிலிருந்து ஒன்றை பிரியச் செய்கிறது
7. இதனால் இலைவாய் திறக்கிறது
8. காவற்கலங்களில் இருந்து நீர் இழக்கப்படும் போது
9. இலைவாய் மூடுகிறது
10. K^+ உட்பாய்ச்சல் கருதுகோள் இதனை விளக்கிறது
11. பகலில் அயல்மேற்றோல் கலங்களில் இருந்து
12. உயிர்ப்பாக K^+ காவற்கலத்தினுள் செறிவடைகிறது
13. உட்பாய்ச்சலுக்கான சக்தி காவற்கலங்களின்
14. ஒளித்தொகுப்பின் இலத்திரன் பாய்ச்சல் மூலம் கிடைக்கிறது
15. காவற்கலங்களில் நீரழுத்தம் குறைவடைகிறது
16. அயல்மேற்றோல் கலங்களில் இருந்து
17. நீர் பிரசாரணம் மூலம் காவற்கலங்களினுள் செல்லும்
18. காவற்கலங்களின் வீக்கம் அதிகரித்து இலைவாய் திறக்கும்
19. காவற்கலங்களில் இருந்து K^+அயல்மேற்றோல் கலங்களுக்கு இழக்கப்படுவதால்
20. காவங்கலங்களில் இருந்து புறப்பிரசாரணம் மூலம் நீர் இழக்கப்படுகிறது
21. காவற்கலங்களின் வீக்கம் குறைந்து இலைவாய் மூடுகிறது
22. அப்சிசிக்கமிலம் K^+ உட்பாய்ச்சலில் முக்கிய பங்காற்றுகிறது

www.ikedu.lk

b. 1. உட்சுவாசம் உயிர்ப்பான செயல்முறை

2. பழுவிடைதசை, பிரிமென்றகட்டுத் தசை சுருக்கமடையும்

3. மார்புக்குழி விரிவடையும்

4. புடைக்குழி மென்சவ்வுகள் ஒன்றன் மேல் ஒன்று வழுக்கலடைந்து

5. மார்புக்குழி கனவளவு அதிகரிக்கும்

6. நுரையீரல் கனவளவு அதிகரிக்கும்

7. வெளிச் சூழல் வளி அமுக்கத்தை விட

8. நுரையீரல் அமுக்கம் குறைவடைகிறது

9. நுரையிரல்களுக்கும், சூழலுக்குமிடையிலான அமுக்கப்படித்திறன் உருவாக்கப்படும்

10. வளி உயர்அமுக்கப்படித்திறன் கொண்ட சூழலில் இருந்து
குறைந்த அமுக்கப்படித்திறன் கொண்ட நுரையீரல்களினுள் செல்லும்

உ. 1. DNA மூலக்கூறு இரண்டு எதிர் சமாந்தர

2. பல் டீஒட்சிறைபோ நியுக்கிளியொரைட்டு இழைகளால் ஆனது

3. இரட்டை சுருள் விரிபரப்பு கட்டமைப்பு (double helix) உடையது

4. இரண்டு வெல்ல பொஸ்பேற்று இழைகள் எதிர் எதிர் திசையில் அமைந்திருக்கும்

5. வெல்ல பொஸ்பேற்று இழைகள் சுருளின் வெளிப்புறத்தில் அமைந்திருக்கும்

6. நைதரசன் மூலங்கள் சுருளின் உள்புறத்தில் அமைந்திருக்கும்

7. சோடியான நைதரசன் மூலங்களுக்கிடையிலான

8. ஐதரசன் பிணைப்பு மூலம் இரண்டு இழைகளும் இணைந்திருக்கும்


9. பியுரின்கள் பிரிமிடின்களுடன் சோடி சேரும்

10. அடினின் தயமின் உடன் இரு ஐதரசன் பிணைப்பால் இணைந்திருக்கும்

11. குவானின் சைற்றோசின் உடன் மூன்று ஐதரசன் பிணைப்பால் இணைந்திருக்கும்

12. டீஒட்சிறைபோ நியுகிளியோரைட்டு டீஒட்சிறைபோசு,
நைதரசன் மூலம், பொஸ்பேற்று கூட்டம் கூறுகள் கொண்டது

13. இரு இழைகளும் ஒன்றுக்கு ஒன்று குறைநிரப்புகின்ற முறையில் அமைந்திருக்கும்



22+ 10+ 13=35
35x 4= 140
fully labeled diagram 10
140+10 = 150

www.ikedu.lk